தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

வியாழக்கிழமை, 1975 மார்ச் 6

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்விகள் 201, 202, 203 பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

திருப்புவனம்—புல்வாய்க்கரை சாலை

* 204 வினா—திரு. த. சோனையா: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம்—புல்வாய்க் கரை நெடுஞ்சாலையினை சீர்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அத்திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (இ) ரூபாய் 75,500 செலவில் இச்சாலை செப்பனிடப்பட்டுள்ளது.

கொடைக்கானல் வட்டத்தில் மலைச்சாலைகள்

* 205 வினா—திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) மதுரை மாவட்டம், கொடைக்கானல் தாலுக்காவில், பெரும்பாறையில் இருந்து ஒட்டன்சத்திரத்திற்கு பெரியூர் வழியாகவும், பண்ணைப்புரத்திலிருந்து ஒட்டன்சத்திரத்திற்கு பெரியூர் வழியாகவும் மலைச்சாலைகள் அமைப்பது குறித்து அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா?